ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-20

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 20/1994) நிறைவேற்றப் பெற வேண்டும்." எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைச்) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைச்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1994) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1994)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

@2-5-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

1994 மே 4]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 121 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 121 முடிய, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைச்) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 21/1994) நிறை வேற்றப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

எஞ்சிய மூன்று, மற்றது எல்லாம் நாளைக் காலை எடுத்துக் கொள்ளலாம். அதிலே பல உறுப்பினர்கள் பேச வேண்டு மென்று கேட்டிருக்கிறார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-5-1994) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-23 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

183. மதிப்பீட்டுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை, 1993-94.

184. மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1993-94.

185. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தி மூன்றாவது அறிக்கை, 1993-94.